[2017 மார்ச் 22

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 62, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

62—

பகுதிநேர நியாய விலைக் கடை

***1915—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கானலபாடிபட்டி கிராமத்திற்கென ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, சோமாசிபாடி ஊராட்சிப் பகுதியில், சோமாசிபாடி தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வருகின்றது. இச்சங்கத்தினால் நடத்தப்படும் கானலபாடி முழுநேர நியாய விலைக் கடைமூலம் கானலபாடிபட்டியைச் சேர்ந்த 105 குடும்ப அட்டைதாரர்களையும் சேர்த்து 774 குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அரசின் நிபந்தனைப்படி புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் வேண்டும் என்ற நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், கானலபாடிபட்டி கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களின் அத்தியாவசியத் தேவையாக ரேஷன் கடைப் பொருட்கள் இருக்கின்றன. இங்கே சொன்னதுபோல ஒரு

2017 மார்ச் 22]

தாய்க் கடைக்கு 500 அட்டைகளும், அதுபோல் பிரிக்க வேண்டிய கடைகளுக்கு 150 அட்டைகளும் என்கின்ற அந்த நிலை இருக்கின்ற காரணத்தினால், பல்வேறு கிராமங்களில், அதுவும், பெரிய கிராமங்களைத் தொடர்ந்துள்ள துணைக் கிராமங்களில் தொடர்ந்து இன்றைக்கு பொருட்கள் கிடைக்காத நிலை ஏற்பட்டிருக்கின்றது. தற்போது ஸ்மார்ட் கார்டு வழங்கும் திட்டத்தினைக் கொண்டு வருவதால் புதிய கடைகள் திறப்பதில்லை என்ற முடிவில் அரசாங்கம் இருந்து கொண்டிருக்கின்றது. இதனால் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இன்றைக்கு Internet–ல் தகவல் கொடுத்தாலே வீடுதேடி பொருட்கள் வரக்கூடிய அளவிற்கு நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. இதுபோன்ற காலங்களில் ரேஷன் பொருட்கள் மக்களைச் சென்றடையக் கூடிய நிலை வேண்டும். அதிலும் குறிப்பாக குக்கிராமங்களுக்கும் ரேஷன் பொருட்கள் சென்றடையக்கூடிய நிலை வேண்டும் என்ற வகையில் என்னுடைய கீழ்பெண்ணாத்தூர் தொகுதியில், துரிஞ்சாபுரம் ஒன்றியம், கீழ்பெண்ணாத்தூர் ஒன்றியத்தில் பல்வேறு இடங்களில் இப்படிப்பட்ட கடைகள் திறக்கப்பட வேண்டியிருக்கின்றது. ஆகவே, இதில் கவனம் எடுத்து இந்த அரசு அதனை நிறைவேற்றித் தருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 2011–ல் அமைந்தவுடன் தமிழகத்தில் இருக்கின்ற சாதாரணப்பட்ட, சாமானியப்பட்ட ஏழை மக்களுக்கு இந்த பொது விநியோகத் திட்டப் பொருட்கள் தங்குதடையின்றி அவர்கள் வசிக்கின்ற இடத்திற்கே கொண்டு செல்லப்பட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தின் அடிப்படையில்தான் கடந்த 6 ஆண்டுகளில் 1,558 புதிய பகுதி நேரக் கடைகளும், அதேபோன்று ஏறத்தாழ 631 முழுநேர கடைகளும் இதுவரை திறக்கப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ 2,189 கடைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு திறந்திருக்கின்றது. இதுபோக 37 நகரும் நியாய விலைக் கடைகள் மூலமாக கிராமப்புறங்களில், மலைக் கிராமங்களில் வாழ்கின்ற மக்களுக்குக்கூட அவர்களது இல்லங்களுக்கு அருகிலேயே சென்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அத்தியாவசியப் பொருட்களைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றது.*

முற்பகல் 10-15

நான் ஏற்கெனவே இங்கு பலமுறை சொல்லியிருக்கிறேன். குறிப்பாக, திருச்சி, மலைக் கிராமமான பச்சைமலையில் சிறிய பழமலை, பெரிய பழமலை என்று இரண்டு கிராமங்கள் இருக்கின்றன. ஒரு கிராமத்தில் 19 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. மற்றொரு கிராமத்தில் 27 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. மாதத்தில் இரண்டு நாட்கள் அந்த மலைக்கிராமத்திற்கே ரேஷன் பொருட்களைக் கொண்டுபோய் கொடுக்கின்ற அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. அதேமாதிரி திருப்பூர் மாவட்டத்தில், மாவடைப்பு, குளிஞ்சிப்பட்டி என்ற இரண்டு கிராமங்கள் மலையின் உட்பகுதியில் இருக்கின்றன. ஏறத்தாழ 52 கிலோ மீட்டர் மலையின் உட்பகுதியிலே சென்று அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு அம்மாவின் அரசு பொருட்களை வழங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, இந்த கானலபாடிபட்டி கிராமம் தாய்க் கிராமத்திலிருந்து ஏறத்தாழ 4 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. அங்கே 105 குடும்ப அட்டைகளே இருந்தாலும்கூட, அரசு விதிகளுக்குட்பட்டு அரசினுடைய நிபந்தனைகளைத் தளர்த்தி, மேற்கண்ட அந்தக் கிராமத்தில் புதிய பகுதி நேரக் கடை அமைத்துக் கொடுப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, மாண்புமிகு முதலமைச்சரின் ஒப்புதலோடு அங்கே கடை அமைப்பதற்கு கூட்டுறவுத் துறையின் மூலமாக முயற்சி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விரைவில் அங்கு பகுதி நேரக் கடை திறப்பதற்கு அனுமதியளிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல செங்கம் தொகுதியில், தண்டராம்பட்டு, அகரம் பள்ளிப்பட்டு, கானலபாடியிலிருந்து பட்டி என்ற துணை கிராமத்திற்கு 3.3 கி.மீ. தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. அவ்வளவு தூரம் அவர்கள் நடந்து வந்து பொருட்களை வாங்கிச் செல்ல வேண்டும். சில ஊர்களின் குறுக்கே காட்டாறுகள் ஓடுகின்றன. அந்த ஆற்றைக் கடந்து வந்து அவர்கள் பொருட்களை வாங்க முடியாத நிலை இருக்கிறது. பல்வேறு ரேஷன் கடைகளில், ரேஷன் கடை பணியாளர்கள் இல்லாமல், ஒரு நாளைக்கு 7, 8 கடைகளை ஒருவரே பார்க்க வேண்டிய சிரமம் இருக்கின்ற காரணத்தால், பொருட்களைப்

2017 மார்ச் 22]

பெறுவதில் மக்கள் சிரமப்படுகிறார்கள். பல்வேறு வகையிலே அரசு இதிலே அக்கறை எடுத்துக்கொண்டு ரேஷன் கடைகள்தான் மக்களுடைய அத்தியாவசியத் தேவை என்ற வகையிலே தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து துணைக் கிராமங்களிலும் ஒரே நேரத்தில் பகுதி நேர ரேஷன் கடைகளைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக தமிழகத்தில் 23,678 முழு நேர நியாய விலைக் கடைகளையும், 9,017 பகுதி நேர நியாய விலைக் கடைகளையும் ஆக மொத்தம் 32,695 நியாய விலைக் கடைகளை கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தி வருகின்றன. குறைந்த வருவாயைக் கொண்டு நடத்தப்பெறுகின்ற கூட்டுறவுச் சங்கங்கள், குறைந்த வருவாயைப் பெற்றிருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்கள், அரசு வழங்குகிற மானியத்தின் மூலமாகவே நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றன. குறிப்பாக, முழு நேரக் கடையிலிருந்து ஒரு பகுதி நேரக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து பார்த்தபின்தான் அமைக்கப்படுகின்றன. எனவே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நடத்தப்படுகிற கடைகளுக்கு நிதிச் சுமை இல்லாதபட்சத்தில் இரண்டு நியாய விலைக் கடைகளை அமைக்கலாம்.*

பல இடங்களில் ரேஷன் கடைகள் திறப்பதில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இதுபோன்ற சூழ்நிலை ஏன் ஏற்படுகிறது என்றால், ஒரு பணியாளரே பல பகுதி நேரக் கடைகளைத் திறக்க வேண்டியிருப்பதனால் வாரத்தில் மூன்று நாட்கள்தான் பகுதி நேரக் கடையைத் திறக்க முடிகிறது. ஆக, மூன்று நாட்கள் தாய்க் கடையை அடைத்தாக வேண்டும். எனவே, இதுபோன்ற சூழ்நிலையில்தான், அரசு என்ன சொல்கிறது என்றால், நிதிச் சுமை இல்லாதபட்சத்தில், ஒரு தாய்க் கடைக்கு 2 பகுதிநேரக் கடைகள் அமைக்கலாம். அதற்குமேல் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. அப்படி அமைத்தால், முழு நேரக் கடையும், பகுதி நேரக் கடையாக அமைந்துவிடும் என்ற காரணத்தினால்தான் அதைச் செய்யவில்லை. அரசு முழுக்க முழுக்க நகரப்பகுதிகளில்கூட, குறிப்பாக சென்னையை எடுத்துக்கொண்டால், 52 தெருக்களில் ஏறத்தாழ 10,637 வீடுகளுக்கு

அவர்களின் இல்லங்களுக்கு அருகிலேயே கொண்டுபோய் ரேஷன் பொருட்களை வழங்கக்கூடிய அரசு அம்மாவினுடைய அரசு என்பதை பெருமையோடு சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னொன்று இந்த அவைக்குச் சொல்ல வேண்டுமானால், இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக, இந்தளவிற்கு சிறப்பாக ரேஷன் கடைகளை நடத்துகிற அரசு வேறு எங்கும் இல்லை, அது புரட்சித் தலைவி, அன்னபூரணி அம்மாவினுடைய அரசுதான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குரங்குகளைப் பற்றி நான் பேசுகின்றபொழுது, குரங்குகளை ** என்று பேசினேன். அதை, உயிர் வாழ்வதற்குரிய சூழ்நிலையை உருவாக்கி, அதைக் குறைப்பது, தடுப்பது என்று திருத்திக்கொள்ளும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வாறே திருத்தப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.

முற்பகல் 10-20

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி என்பதை இங்கே நான் அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கின்றேன். இந்தப் பகுதியில் அதிகளவிலான பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைக்கப்பட வேண்டும். அதற்கு நான் தனியாக list வைத்துள்ளேன். இருந்தாலும், குறிப்பாக விஜயநாராயணபுரம் ஊராட்சி, விஜய அச்சம்பாடு பொது விநியோகக் கடையிலிருந்து, பண்டாரபுரத்திற்கு ஒரு கிளைக் கடை அமைத்துத் தர முடியுமா என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2017 மார்ச் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்,*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன். பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைக்க வேண்டும் என்று சொன்னால் 150 கார்டுகள் இருக்க வேண்டும், கிராமப்புறம் அல்லது மற்ற பகுதியாக இருந்தால் 1½ கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகள் உள்ளன. அதுவும் கடைகள் வைப்பதற்கு அரசுக் கட்டடம் அல்லது பொதுக் கட்டடம் கிடைக்க வேண்டும். இல்லாவிட்டால் வாடகை இல்லாமல், கிராம ஊராட்சிப் பகுதியில் இருக்கின்ற கட்டடங்கள் கிடைத்தால் வசதியாக இருக்கும். மேலும், பகுதி நேர நியாய விலைக் கடைக்காக எந்தவிதச் செலவையும் அரசோ அல்லது சங்கமோ ஏற்றுக்கொள்ள இயலாது. சங்க நிதிநிலையைப் பொறுத்துதான் செய்ய முடியும்.*

தாய்க் கடையில் இருக்கும் பணியாளரே, விற்பனையாளரே அந்தப் பகுதி நேர நியாய விலைக் கடையையும் திறக்க வேண்டும் என்ற நிலை உள்ளது. வாரத்தில் மூன்று நாட்கள் அந்தக் கடையை திறக்கலாம் என்று நான் ஏற்கெனவே சொல்லியுள்ளேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, எந்தக் கடையாக இருந்தாலும், சட்டம் மற்றும் கூட்டுறவுச் சங்கத்தின் விதிகளுக்குட்பட்டு இருக்கும்பட்சத்தில், நிச்சயமாக உறுப்பினரின் கோரிக்கையைப் பரிசீலித்து, கூட்டுறவுத் துறை மூலமாக மாண்புமிகு முதலமைச்சரின் ஒப்புதலோடு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.*

திரு. வாகை சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரி, இந்திரா நகர்* First Avenue–*ல் கடை எண் 3, 4 ஆகியவை அடையாறு மகளிர் கூட்டுறவுப் பண்டகசாலையில் இயங்கி வருகின்றன. பொது மக்கள் இரண்டு மற்றும் மூன்று கிலோ மீட்டர் தூரம் நடந்து வந்து அங்குள்ள பொருட்களை வாங்க வேண்டியுள்ளது. மக்களுடைய வசதிக்கேற்ப கடை இருக்கின்ற இடத்தை மட்டும் மாற்றித் தர வேண்டும் என்று*

மக்கள் விரும்புகின்றார்கள். கடை எண் 3–ஐ வெங்கட்ரெத்தினம் நகருக்கும், கடை எண் 4–ஐ இந்திரா நகர் குடிசை மாற்று வாரியப் பகுதியிலும் மாற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், வேளச்சேரி, காந்தி சாலையில் இரண்டு கடைகள் இருக்கின்றன. ஒரு கடை L.C. 030 அதில் 1,371 கார்டுகள் இருக்கின்றன. மற்றொன்று L.C. 091 அதில் 1,255 கார்டுகள் இருக்கின்றன. இந்த இரண்டு கடைகளும் Septic tank மேல் இருப்பதனால், அரிசி மூட்டைகள் எல்லாம் ஈரமாகி விடுகின்றன. எலித் தொல்லையும் அதிகமாக உள்ளன. சேவா நகரில் ஓர் அரசு இடம் உள்ளது. அங்கு கடைகளை மாற்றித் தந்தால், மக்களுக்கு வசதியாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அந்தத் தொகுதியில் பரிட்சயமானவர், மேலும் அவர் ஒரு நடிகர், அவருக்கு மக்கள் பழக்கம் அதிகமாகவே இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் உண்மையிலேயே அந்தக் கடைகள் எல்லாம் இருக்கும்பட்சத்தில், அவர் யாரிடமாவது சொல்லி வாடகைக்கு ஒரு கட்டடத்தையோ அல்லது அரசுக் கட்டடத்தையோ அல்லது மாநகராட்சி கட்டடத்தையோ பெற்றுக் கொடுக்கும்பட்சத்தில், உறுதியாக அந்தக் கடைகள் மாற்றிக் கொடுக்கப்படும்.

Septic tank மேல் அந்தக் கடைகள் இருப்பதாகச் சொன்னார். அந்த மாதிரி கடைகள் இருந்தால், கூட்டுறவுத் துறையின் மூலமாக, மாண்புமிகு முதலமைச்சரின் அனுமதியோடு, உடனடியாக அந்தக் கடைகளை மாற்றிக் கொடுப்பதற்கு, அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 63, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.